# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

## CC.No. 62/2025

## வழக்கு சாட்சி PW.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **ராஜேந்திரன்** | தொழில் | : சார்பு ஆய்வாளர் |
| தகப்பனார் பெயர் | : இடும்பன் சேர்வை | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : தாண்டிக்குடி | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 58/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 13.07.2026 |

**( எதிரிகள் A1, A2, A3 மற்றும் A4 ஆஜரில் உள்ளனர்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது தாண்டிக்குடி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் . இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சேகர் பணிமாறுதலில் சென்றுவிட்ட காரணத்தால் நீதியின் நலன் கருதியும் , நீதிமன்ற கால நேர விரயத்தை கருதியும் ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 30.06.2025 ம் தேதி 23.20 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் வெள்ளைச்சாமி என்பவர் நிலையில் பொறுப்பில் இருந்தபோது பெரியகுளம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மறுநாள் 01.07.2025 ம் தேதி பெரியகுளம் அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிக்சையில் இருந்த ராமமூர்த்தி மகன் ஹரிஹரன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து அதன் தன்மைக்கேற்ப நிலையக்குற்ற எண்.90/2025, பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS ன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். வாதி கொடுத்த

புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். சிறப்பு சார்பு ஆய்வாளர் வெள்ளைச்சாமி பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆகும். பிறகு இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் சேகர் 02.07.2025 ம் தேதி காலை 07.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜெயக்குமார், சண்முக வடிவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் . அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே **அ.சா.ஆ.3** முதல் **அ.சா.ஆ.4** ஆகும். மேலும் இவ்வழக்கில் தொடர்புடைய சாட்சிகளான ஹரிஹரன் , சாந்தி, ராமமூர்த்தி, சதீஸ்குமார் மற்றும் மேற்சொன்ன பார்வை மகஜர் சாட்சிகள் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் . இவ்வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவர எதிரிகள் உயர்நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டபடியால் எதிரிகள் அருண்குமார் , கன்னிகா பரமேஷ்வரி, செந்தில்குமார், கவிதா என்கின்ற அழகேஸ்வரி ஆகியோர்களை கைது செய்யவில்லை . இவ்வழக்கின் காயமுற்ற சாட்சி ஹரிஹரனுக்கு சிகிச்சை அளித்த பெரியகுளம் அரசு மருத்துவமனை மருத்துவர் கார்த்திக் என்பவரை விசாரணை செய்து காயச்சான்று பெற்றுள்ளார், அதில் ஹரிஹரனுக்கு ஏற்பட்ட காயம் குறித்து கருத்துரை எதுவும் கூறப்படவில்லை. அந்த காயச்சான்று **அ.சா.ஆ.5** ஆகும். இத்துடன் சார்பு ஆய்வாளர் சேகர் அவரது வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS ன் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் சொன்னது போன்று சார்பு ஆய்வாளர் அரசு மருத்துவனை சென்று புகார் மனு பெறவில்லை என்றாலும், எந்த ஒரு சாட்சியையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்களை

அணைத்தும் காவல் நிலையத்தில் வைத்து புகாருக்கு ஏதுவாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . எதிரிகள் குற்ற சம்பத்தில் ஈடுபடவில்லை என்றாலும் இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.13 16:14:45 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.